# வலயக் கல்வி அலுவலகம் - கிளிநொச்சி
## மூன்றாம் தவணைப் பரீட்சை – 2020

தரம் :08

தமிழ்மொழியும் இலக்கியமும்

சுட்டெண் ..........................................................................

நேரம் : 2.00 மணி

### பகுதி - I

❖ மிகப்பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

01) "கான் ஆள நிலமகனைக் கைவிட்டு" என்பதில் கான் என்பதன் பொருள்.
அ. வானம் ஆ. நாடு இ. காடு ஈ. கானம்

02) பின்வருவனவற்றுள் காரண இடுகுறிப் பெயராக அமைவது.
அ. வளையல் ஆ. கணக்காளன் இ. மரம் ஈ. கொக்கு

03) மாணவனுக்குரியது பணிவு இங்கு "கு" உருபு உணர்த்தும் பொருள்.
அ. நட்பு ஆ. கொடை இ. உறவு ஈ. தகுதி

04) பேஸ்புக் (face book) என்பதற்கான கலைச்சொல்.
அ. முகநூல் ஆ. இணையம் இ. லப்டொப் ஈ. வைபர்

05) ஒரு பாட்டுடையவன் என்று கூறப்படுபவர்.
அ. இராவணன் ஆ. இராமன் இ. சத்துருக்கன் ஈ. பரதன்

06) குமணன் பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெற்றான். இவ்வாக்கியத்தின் செயற்படுபொருள் அடைமொழி.
அ. புள்ளிகளை ஆ. பெற்றான் இ. பரீட்சை ஈ. அதிக

07) தமிழிலுள்ள முதலெழுத்துக்களின் தொகை.
அ. 30 ஆ. 18 இ. 12 ஈ. 216

08) வரட்சியினால் பயிர்கள் --------- காணப்பட்டன.
அ. ஓங்கியுயர்ந்து ஆ. வாடிவதங்கி இ. பச்சைப்பசேல் ஈ. சில்லென்று

09) பிரெஞ்சுமொழிச் சொல்லாக அமைவது.
அ. வசூல் ஆ. அட்டிகை இ. குசினி ஈ. இடாப்பு

10) மலை - தொடர் போல பல்.
அ. அடுக்கு ஆ. வரிசை இ. பந்து ஈ. கட்டு

11) குரங்கு, கவிஞன், பாட்டு ஆகிய பலபொருள் தரும் சொல்.
அ. கவி ஆ. ஓடம் இ. இசை ஈ. வானரம்

12) நீ வந்தாலன்றி நாளை நான்
அ. போவேன் ஆ. போகேன் இ. போனேன் ஈ. போவோம்

13) ஆசிரியர் கற்பித்தவை அனைத்தும் ------- போல் மனதில் பதிந்தன.
அ. சூரியன் கண்ட பனிபோல் ஆ. இலவு காத்த கிளி போல்
இ. அத்தி பூத்தாற் போல் ஈ. பசுமரத்து ஆணிபோல்

14) ச்சீ பார்க்கவே வயிற்றைப்பிரட்டுகிறதே இவ்வாக்கியத்தில் இட வேண்டிய நிறுத்தற்குறி.
அ. ? ஆ. ! இ. . ஈ. :



Education கல்வி அධ්‍යාපන
kalvi.lk

15) இயல்புப்புணர்ச்சிக்கு உதாரணமாக அமைவது
அ. பொற்றாமரை ஆ. நீலவானம் இ. பலாப்பழம் ஈ. ஆணழகன்

16) திருக்குறளின் அதிகாரங்கள்
அ. 1330 ஆ. 1303 இ. 133 ஈ. 331

17) பிறருக்கு உதவுவது நற்பழக்கமாகும். பிறர் என்பதன் எதிர்ப்பதம்.
அ. அவர் ஆ. தமர் இ. காவலர் ஈ. அமர்

18) இன்று மனிதர்கள் வாயைக் கட்டித்தான் பணம் திரட்டுகின்றனர். இங்கு வாயைக்கட்டி என்ற மரபுத்தொடரின் பொருள்.
அ. சிக்கனமாக இருத்தல் ஆ. செலவு செய்தல்
இ. உயர்வடைதல் ஈ. உலோபத்தனம்

19) எல்லோரும் இன்புற்று வாழ்க. இவ்வாக்கியத்தின் வகை.
அ. ஏவல் ஆ. செப்பு இ. வினா ஈ. வியங்கோள்

20) அச்சாணி இல்லாத தேர் முச்சாணும் ஓடாது. என்ற பழமொழியின் பொருள்.
அ. பகட்டு ஆ. முக்கியத்தவம் இ. வேகம் ஈ. அழிவு

21) ஐம்பதாவது ஆண்டின் இறுதியில் எடுக்கப்படும் விழா.
அ. வெள்ளி விழா ஆ. அமுதவிழா இ. பவளவிழா ஈ. பொன்விழா

22) குமரன் சிறப்பாக பாடினான்.
அவனால் வெற்றி பெற முடியவில்லை. இவ்விருவாக்கியங்களையும் இணைக்கப் பொருத்தமான இணைப்பிடைச் சொல்.
அ. ஆகவே ஆ. எனினும் இ. என்று ஈ. என

Education கல்வி அධ්‍යාපන

23) பழுத்த இலைகள் உதிர்ந்தன. இவ்வாக்கியத்தில் இலை என்பது.
அ. பொருட்பெயர் ஆ. சினைப்பெயர் இ. குணப்பெயர் ஈ. இடப்பெயர்

24) உயிர்நெட்டெழுத்துக்களின் எண்ணிக்கை.
அ. 05 ஆ. 12 இ. 07 ஈ. 09

25) ஓடிய பையன் விழுந்தான். இங்கு விழுந்தான் என்பது.
அ. வினைமுற்று ஆ. வினையெச்சம் இ. பெயரெச்சம் ஈ. முற்றுவினை

(25 புள்ளிகள்)

## பகுதி - II

❖ **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

**01. பின்வரும் பாடலை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

வானத்தில் பிறந்த மழையே வா - இந்த
வையகத்தை வாழ வைக்க மழையே வா
சீனிக் கரும்பு தர மழையே வா - நல்ல
செந்நெல் செழிப்பாக்க மழையே வா
காடு செழிக்க வைக்க மழையே வா - நல்ல
நாடு செழிக்க வைக்க மழையே வா
ஆறு கிணறு குளம் ஏரி எல்லாம் - நீர்
அழகு படுத்த நல்ல மழையே வா.

1) வையத்தை வாழ வைக்க கவிஞர் எதனை வரவழைக்கின்றார்.
2) மழையினால் கிடைக்கப்பெறும் பயன்கள் எவையெனக் கூறப்படுகின்றது?
3) இப்பாடலில் கூறப்படும் நீர்நிலைகள் எவை?

kalvi.lk

4) இச் செய்யுளைப் பாடியவர் யார்?
5) பின்வரும் சொற்களுக்கு ஒத்தகருத்து எழுதுக.
வானம் அழகு

(10 புள்ளிகள்)

**2. பின்வரும் தலைப்புக்களில் ஒன்றைத் தெரிவு செய்து 150 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக?**

அ. உடைந்த கைத்தொலைபேசியின் சுயசரிதை
ஆ. நான் விரும்பும் நூல்
இ. உள்ளம் கவரும் எழில்மிகு வயல்வெளி
ஈ. உலகையே அச்சுறுத்தும் கொரோனா வைரஸ்

(20 புள்ளிகள்)

3. கொரோனா விடுமுறை காலத்தை பயனுள்ள வகையில் கழித்தீர் என்பதை விளக்கி நண்பனுக்கு ஒரு கடிதம் வரைக. (75சொற்களுக்கு குறையாமல் இருக்க வேண்டும்.)

(15புள்ளிகள்)

4. பின்வரும் வினாக்களில் எவையேனும் 05 வினாக்களுக்கு மட்டும் விடை தருக?

1) நாடகம் பாமர மக்களின் பல்கலைக்கழகம்....
அ. இக்கூற்றைக்கூறியவர் யார்?
ஆ. நாடகமே உலகம் என்ற கட்டுரையை எழுதியவர் யார்?

2) ஐம்பெரும் காப்பியங்கள் எவை?
3) “யாகாவார் ஆயினும் நாகாக்க காவாக்கால் சோகாப்பர் சொல்லிழுக்கப்பட்டு”.
அ. ஒருவர் எதனைக் காக்க வேண்டும்?
ஆ. நாவைக் காத்துக் கொள்ளாமையினால் ஏற்படும் தீங்கு யாது?
4) நாட்டார் பாடல்களுக்கு கூறப்படும் வேறுபெயர்கள் 03தருக?
5) பின்வரும் கூற்றுக்களுக்குப் பொருத்தமானவர்களின் பெயர்களை எழுதுக?
அ. முல்லைக்கொடிக்குத் தேர் கொடுத்தவர்....
ஆ. மயிலுக்குப் பொன்னாடையை அளித்தவர்...
இ. புறாவின் இறைச்சிக்குப் பதிலாக தன்னையே கொடை தந்தவர்...
ஈ. கன்றை இழந்த பசுவிற்கு நீதி வழங்க தன் மகனையே இழந்தவர்...
6) நான் அரசனாக இருந்த காலத்தில் நீர் வந்தீரில்லையே...
அ. இக்கூற்று யாரால் யாருக்கு கூறப்பட்டது.
ஆ. இந்நாடகத்தின் பெயர் யாது?
7) இராமாயணத்தில் தசரத புத்திரர்கள் யாவர்?
8) இராபட் புருஸ் சிலந்தியிடமிருந்து கற்றுக் கொண்ட படிப்பினை யாது?

(5 x 4 = 20 புள்ளிகள்)

05) கருத்துப்புலப்படுமாறு வாக்கியம் அமைக்குக?

1. மாணவன்
2. மானவன் -
3. ஆடிப்பாடி -
4. வெட்டவெளி
5. குபுகுபு

(10 புள்ளிகள்)

Education கல்வி අධ්‍යාපන

Education
கல்வி
අධ්‍යාපන
kalvi.lk

May

ONLINE CLASSES - 2025

# NEW ADMISSIONS

## 2ம் தவணை வகுப்புகள்

தரம் 6 முதல் O/L வரை

**அனைத்து பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ் ...**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் ZOOM APP மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.



**JOIN NOW**

WWW.KALVI.LK

**075 287 1457**